செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ., அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞூ ஆனி மீ கசு உ வெள்ளிக்கிழமை (3-7-1970) [இல-கஉ

இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை — இந்து சமயம்.

# ஆட்சேபனை நற்பயனளித்தது

## சைவ நீதி காக்கப்பட்டது!

### சைவசமயத் தாபனங்களின் மகிழ்ச்சி

ஷை பரீட்சைக்குரிய இந்துசமயப் புதுப் பாடத் திட்டத்தை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை முதலிய சைவத் தாபனங்களும், பத்திரிகைகளும், சைவப்பெரியார்களும் ஆட்சேபித்தமையை அறிந்து பரீட்சாதிகாரி அவர்கள் புதிய பாடத் திட்டத்தை நிராகரித்துள்ளனர். பழைய பாடத்திட்டமே மேல் அறிவித்தல் கொடுக்கும்வரை அமுலிலிருக்கும்.

### பரீட்சாதிகாரியின் கடிதம்

1969 அக்டோபர் 28-ஆந் திகதிய 2-ஆம் இலக்கத் திருத்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்த மேற்படி பாடத்திற்குரிய புதிய பாடத்திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் சகல பாடசாலைத் தலைவர்களும் பரீட்சார்த்திகளும் அறிவிக்கப்படுகின்றனர் மேலும் அறிவித்தல் கொடுக்கப்படும்வரை இதுவரை வழக்கிலிருந்த பாடத் திட்டமே தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

கே. ரி. டபுள்யூ. சுமணசூரிய
பரீட்சாதிகாரி,

பரீட்சைப் பகுதி,
மலேவீதி, கொழும்பு - 2.
29 ஜூன் 1970.

## பித்தன்

**திரு. ஜெ மகாதேவன் அவர்கள் சென்னை 21.**

(முன் வளர்ச்சி — 2)

அளவற்ற பிழைகளைப் பொறுத்தருளும் உமாதேவியைத் தன் அழகிய உடம்பின் பாதியிலும், மூன்று பிழைகளே பொறுக்கும் கங்காதேவியைத் தன் தலைமுடியிலும் வைத்துக்கொண்டிருக்கிறான் சிவபெருமான். நியாயமாகப் பார்த்தால் பல பிழை பொறுக்கும் உமையைத்தலைமுடியிலும், மூன்று பிழை பொறுக்கும் கங்கைகைதன் உடம்பிலும் வைக்க வேண்டும். ஆனால் இறைவன் அங்ஙனம் செய்யவில்லை. அதனால் தான் அவன் 'பித்தன்' என்ற பெயரினைப் பெற்முன் என்று நகைச்சுவையாகக் கூறுகின்றார். பத்துக் கம்பன் என்று போற்றப் பெறும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், அவர் தம் பாடல்,

அளவறு பிழைகள்
பொறுத்தருள் நின்னை
அணுயுருப் பாதியில்
வைத்தான்
தளர்பிழை மூன்றே
பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன்
அதனுல்
பிளவியல் திங்கள் சூடிய
பெருமான்
பித்தனென் றெருபெயர்
பெற்றன்
களமர்மொய் கழநி
சூழ்திருவானைக்
காவகிலாண்ட நாயகியே.
—அகிலாண்டநாயகிமாலை

பித்தா என்று திட்டிய சுந்தரரை ஆட்கொண்டு தம்மைப் 'பித்தா' என்றே ஆரம்பித்துத் தொடர்ந்து 'சொற்றமிழ்' பாடிப் பரவும்படி 'தூமறைபாடும் வாயா'ராகிய சிவபெருமான் அருள் புரிந்தார். அவ்வாறே சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிப் பரவுவாராயினர். இந்நிகழ்ச்சியை,

'பித்தனென்ற திட்டுக்கும்
சீரருள் செய்தளித்தாய்
என்பர்''

என்று போற்றுகின்றது திருவருட்பா,

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற மணிமொழிக்கேற்பச், சிவபெருமானின் திருவருள் கிடைத்தால் தாம் நாம் அவனைப், பித்தன், சித்தன், என்று

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முடியாப் பிறவிக் கடலிற்
புகார்
முழு துங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்
படார்!
வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர்
குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள்
திருநாமம் புகல்பவரே.
திருச்சிற்றம்பலம்

—அருணகிரிநாதசுவாமிகள்.

### மகா கும்பாபிஷேகம்

தேர்ன்டைமறு, செல்வச் சந்நிதிப் பெருமான் திருவாலயத் தூபிகள் திருவுருவங்களும் புதுக்கி அமைக்கப்பட்டு 10-7-70 வெள்ளிக்கிழமையன்று சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெறும். ஆனி உத்திரத்திலன்று மணவாளக்கோல வைபமும் நிகழும்.

## கதிர்காமத்துக்கு சைக்கிளில் யாத்திரை

வண்ணார்பண்ணை திரு. சி. சிவகுருநாதன் அவர்கள் 4-7-70 சனிக்கிழமை கதிர்காமசுவாமி கோயில் கொடியேற்றத்திலன்று காலை 9 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திலுள்ள ஞான வைரவர் ஆலயத்திலிருந்து சைககிளில் புறப்பட்டு கதர்காமத் தலத்துக்கு யாத்திரை செய்வார். நல்லூர் முருகண்டி, மாங்குளம், அநுராதபுரம் புத்தளப், சிலாபம, கொழும்பு, அம்பலாங்கொடை, காலி, மாத்தறை மார்க்கமாகச் செல்லுவார். இவர் சென்ற 68, 69-ஆம் ஆண்டுகளிலும் இத்தகைய யாத்திரையைச் செய்தவராவர். யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரென்பதும் குறிப்பிடத்தககது. (ந வி.)

## தீட்சையின் மகத்துவம்

[ ஸ்ரீமத். பொ. அம்பலவாண தேசிகர், தெல்லிப்பழை ]

விறகுக்கு அக்கினியின் சம்பந்தம் வந்தபின்பு முன்னுள்ள பசுமை சம்பந்தமான வடிவமும் விறகென்னும் பெயரும் போய், சுடர் என்னும வடிவமும் தணல் என்னும் பெயரும் வந்தது போலவும், இரும்பிற்கு இரசகுளிகையின் சம்பத்தால் முன்னுள்ள கருவடிவமும் இரும்பென்னும் பெயரும்போய் ஒளி வடிவமும் பொன் என்னும பெயரும் வந்தது போலவும்,

முத்துச்சிப்பியில் விழுந்த நீருக்கு முன்னுள்ள நெகிழச்சி வடிவமும் நீர் என்னும் பெயரும் போய கடினமாயுள்ள ஒளி வடிவமும் முத்து என்னும பெயரும் வந்தது போலவும, உப்பளத்தைச் சார்ந்த அனைத்தும் உப்பாணற் போலவும்; அப்படியே சிவதீட்சா சம்ஸ்காரம் பெற்ற அனைவருக்கும் முன்னுள்ள சாதியும் போய் வேறொரு கோத்திரமும், வேறொரு பெயரும் ஒரு மகத்துவமும் உண்டாகும. சமய, விசேட, நிர்வாண தீட்சைகளோடு ஆசாரியா பிடேகமும் பெற்றவர் குரு. தேசிகன், பட்டர், பட்டாரகன் ஆசாரியர் என்பன ஒரு பொருட் சொற்கள். குரு - கௌரவமுடையவர். தீட்சையால் உயர்ந்து மற்றையோரால் மதிக்கப்படும் பெருமை உடையவர். தீட்சையில் சீடனது ஆன்மா வாகீசுவரியின் கர்ப்பத்தில் வாகீசுவரனுக்குப் பிள்ளையாகப் பிறக்கிறது. இது இரண்டாம் பிறவி தீட்சா குருவினல் சீடனுக்கு ஒரு புதுப் பெயர் இடப்படும். குருவின் சரீரம் மந்திர சரீரம். ஆன்மா சிவசொரூபம், குருவை வந்திப்போர் அவரது புண்ணிய பலன்களை அடைவர். நிந்திப் போர் பாவபலன்களை அடைவர்.

அண்ணலம்பரனை ஆசாரியன்
றனை அவமதித்தோர்
எண்ணருங்காலம் பவ்வியி

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

தபால், தந்தி மந்திரி, உயர்திரு.

## செ குமாரசூரியர் அவர்களுக்கு சுழிபுரத்தில் பாராட்டு

### கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய தேச ஊழியன் திரு. சேனாதிராசா அவர்களின் தலைமைப் பேருரை

கௌரவ மந்திரி அவர்களே, வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அவர்களே, ஜன சமுத்திரமாய் நிறைந்தும் என் சகோதர சகோதரிகளே!

இன்று, இந்த மாதர் சங்க மண்டபத்தில் நாம எல்லோரும் ஒருங்கு கூடியிருக்கும் நோக்கம், இலங்கையில் தமிழ் நாட்டில வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுழிபுரத்தில் பிறந்த தமிழ்பெருமகன் திரு. செ குமாரசூரியர் அவர்களுக்கு பிரதமர் ஸ்ரீமாவோவும், ஸ்ரீமாவோ அரசாங்கமும் தபால், தந்தி தொடர்பான மந்திரிப் பதவியையும், செனற்றர் பதவியையும்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)



பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரணஞு ஆனிமீ கஉ-உ வெள்ளிக்கிழமை [1970]

## குரைகழற்கே கசிந்துருக வேண்டுவனே

ஆன்மா பாசசம்பந்தமுடையது. அதனாலே அதற்குச் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுண்டு. சிவபெருமான் அநாதி மல முத்தர். ஆகையினால் சர்வஞ்ஞர் சர்வகர்த்தா. தம் வயமுடையவர், வரம்பிலாற்றலுமுடையவர், என்றுமுள்ளவர், எங்குமுள்ளவர். ஓர் ஆன்மா நற்கதியடைவதற்கு இறைவனிடத்தில் அன்பைச் செலுத்துதல் வேண்டும். நிலையில்லாத பொருட்களில் வைக்குமபற்று நிலையுள்ள இன்பத்தை உதவாது. ஒருவன் தாய், தந்தை, மனைவி மைந்தர் முதலிய உறவினரிடத்தில் வைக்கும் அன்பு உடம்பு சம்பந்தமானதால், நிலையில்லாத உடம் பழியவே அவர்களிடத்துக் கொண்டுள்ள அன்பும் தன் பத்துக்கேதுவாகும். நம்மிடத்தில் காமே அன்புகொள்வோமாயின் நமக்கு சிற்றறிவும் சிறுதொழிலும் உளதாகையினால் உண்மையான இன்பம் யாதென நமக்குத் தெரியாது. முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடையவராகியவரும் அநாதிமல முத்தராகியவரும ஆன்மாக்களுக்கு தநு கரணபுவன போகங்களைக் கொடுத்து போகங்களை புசிப்பித்து மலபரிபாகமும் இருவினையொப்பும் சத்திநிபாதமும் வருவித்து பாசநீக்கமும் சிவத்துவவிளக்கமும் உதவுகின்ற பரமபதியுமாகிய சிவபெருமானிடத்தில நாம் அன்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வன்பு பேரறிவையும், பேரின்பத்தையும் நல்கும்.

இக்கருத்தினை உட்கொண்டே திருநாவுக்கரசுநாயனர்

“என்னிலாரு மெனக் கினியா ரில்லை
யென்னி லுமினி யானொரு வன்னுளன்
என்னுளே யுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கு மின்னம்ப ரீசனே.

திருவின்னம்பர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் என்னிலும் இனியவர். எனது உயிர்க்கு உயிராயும் பிராணனுயும் உள்ளனர். உள்ளும் புறம்புமிருக்கின்றூர்.

அப்பெருமானுடைய திருவடியில் நாம் வைக்கும் அன்பும் நிலையில்லாத உலகவிடயங்களில் பற்றை நீக்கிப் பற்றற்றவராகிய இறைவன் திருவடி நீழலில் நம்மை வசிக்க உதவி புரியும்.

இக்கருத்தை, நாம் உய்யும்பொருட்டு மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானுடைய திருவடிகளுக்குக் கீழ் வரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றனர்.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கறபனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா நின் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

உறவினரை விரும்பேன், ஊரை விரும்பேன், பேரை விரும்பேன், கற்றாரை விரும்பேன், இனிக்கற்கவேண்டுவனவும் அமையும். திருக்குற்றாலத்திலே எழுந்தருளியிருக்கின்ற கூத்தப்பிரானே! உனது ஒலிக்கின்ற திருவடிக்கே கன்றையுடைய பசுவைப்போல கசிந்துருக விரும்புவேன். திருவடியே மெய்ச்சார்பு. ஆகையினாலே தான் குரைகழற்கே கசிந்துருகும் பேற்றினை வேண்டுகின்றனர் மாணிக்கவாசகப் பெருமான்.

7-7-70 செவ்வாய்க்கிழமை
மாணிக்கவாசகப்பெருமான் குருபூசை

### கந்தபுராண விரிவுரை

யாழ். கந்தர்மடம், பழம் றேட் பிள்ளையார் கோவிலில் தொடர்ந்து 11 நாட்களாக கந்த புராண விரிவுரை “கான கதா வாரிதி” வண்ணை, பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா அவர்களால் பக்கவாத்தியசகிதம் நிகழ்த்தப்பெற்று சென்ற வெள்ளியன்று வள்ளி திருமணம் என்ற சரிதையுடன் பூர்த்தியானது. (ந. நீ.)

### அலங்காரஉற்சவம்

சாதாரணவருடம் ஆனி மாதம் 20 ஆம் திகதி (4-7-70) சனிக்கிழமை உருத்திரபுரம் பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கதிர்காம - ஏழுமலை மாணிக்கப்பிள்ளையார் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி ஆடிமாதம் 4 ஆம் திகதி (20-7-70) திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவத்துடன் இனிது பூர்த்தியாகும்.

ஈழத்துச்சிதம்பரம் எனவழங்கும் காரைநகர்

## சுந்தரேசுவரர்கோயிலும் ஆண்டி அடியார், அம்பலவி - முருகர்

என்னும் அறச்செல்வர்களின் திருத்தொண்டும்

[(10-7-70) வெள்ளிக்கிழமை நிகழும் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்பெறும் செய்தி]

காரைநகர் திண்ணபுரத்தில் முதல்முதல் ஆலயம் அமைத்த பெருமை ஆண்டியென்னும் மெய்யடியார்க்குரியதாகும். அவருடன் சேர்ந்து அவ்விடத்தில் ஷ கோயிலை விருத்திபண்ணிய பெருமை அம்பலவி முருகரென்னும் பெரியாரைச் சாரும். அவர் அரிசிச் சாதம் உண்பதைக் கைவிட்டமையையும் சோமாஸ்கந்த மூர்த்தியை வார்ப்பித்த வரலாற்றினையும், காரைநகர் காலஞ்சென்ற சைவப்பெரியார், சிவபூஜாதுரந்திரர் திரு. இ. வைத்தியலிங்கம் அவர்கள் 1960-ம் ஆண்டில் பிரசுரஞ் செய்த திண்ணபுர மான்மியம் என்னும் நூலிலிருந்து அநுவதிக்கின்றேம்.]

### அரிசிச் சாதம் உண்ணுமை

அம்பலவிமுருகர் கோயிற் பூசையைக் குறைவறச் செய்வித்து வந்தார். அதற்காக அவர் கமக்காரரிடம் நெலலுத் தண்டியும் வந்தார். அடியவர் ஒருநாள் களபூமி என்னும் குறிச்சியில் நெல்லுத் தண்டப் போனபோது ஒரு கமக்காரன் “அம்பலவி முருகனும் வயிறு வளர்க்க வந்துவிட்டான்” என்று கூறினன். அதனைக் கேட்ட அடியவர் அந்நாள் தொடக்கம் அரிசிச் சாதம உண்பதை விட்டுவிட்டார் இலை காய் கிழங்குகளையே உப்பின்றிப் பாகம் பண்ணி உண்டு வந்தார். அந்நாள் தொட்டு கோயிலில் உப்புச் சேர்க்கப்பட வேண்டிய நிவேதனப் பொருள்கள் உப்பின்றியே பாகம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் ஏற்படுத்தினர். அஃது இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### சோமாஸ்கந்த மூர்த்தி

சில காலஞ்சென்ற பின்பு அம்பலவி முருகர் திருக்கோயிலில் சோமாஸ்கந்த மூர்த்தியையும் தாபிக்க எண்ணினர். அம மூர்த்தியை அமைப்பித்தற்பொருட்டுத் தம மகன் சண்முகத்தாருடன் சிதமபரம சென்றூர். அங்கே ஆசாரிமாரைக் கண்டு சோமாஸ்கந்த மூர்த்தியை வார்ப்பதற்கு ஏற்பாடு செய்தார். ஆசாரிமார் அம் மூர்த்தியை வார்த்தபோது இருமுறை கருச்செவ்வனே பாயாது சிதைவுற்றது. அதனைக் கண்டு வருந்திய அம்பலவி முருகர்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)



உ
சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நாள்: ஆனி மீ உரு-ஆம் உ (7-7-70) செவ்வாய்க்கிழமை

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்

மு. ப. 9 — பி. ப. 1 சிவபூஜா மண்டபம் - சிவபூசை, நாவலர் மண்டபம் - நடராஜர் பூசை, நால்வர் பூசை, திருமுறைப் பூசை, புராண படனம்.
திருவாதவூரடிகள் புராணம் — திருவடிபெற்ற சருக்கம்.
மாகேசுர பூசை.

இரவு 7 மணி விரிவுரைக் கூட்டம்

தலைவர்: சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப் புலவரவர்கள்

திருவாசகமோதுதல்:
திரு. R. துரைச்சுவாமி அவர்கள்

தலைவர் முன்னுரை.

“திருவாசகத்துககு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்”
திரு. சி. இராசரத்தினம் அவர்கள்
நல்லூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நல்லூர்.

“மாணிக்கவாசக சுவாமிகள்”
திரு. மு. கதிரவேலு ஆசிரியர் அவர்கள்.
நல்லூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நல்லூர்

“திருவாசகம் என்னும் தேன”
ஆசிரியர் திரு சி. கார்த்திகேசு அவர்கள்
வண்ணை, நாவலர் சைவப்பிரகாச மகாவித்தியாலயம்.

திருவாசக பாராயணம்
சங்கீதபூஷணம் திரு. வே. சண்முகரத்தினம் அவர்கள்
(நல்லை: ஞானசம்பந்தர் ஆதீனம்)

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

ஆ. தனபாலசிங்கம் — காரியதரிசி
மு. மயில்வாகனம் — சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம். 2.7.70

### பித்தன்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

நினைக்கவும், போற்றவும் முடியும்,

“நினைப்பித்தா நித்தா நிமலா எனநீ
நினைப்பித்தால் ஏழைநினைப்பேன் — நினைப்பின்
மறப்பித்தால் யானும் மறப்பேன் எவையும்
பிறப்பித்தாய் என்றலேன் பேசு”

என்பார் இராமலிங்க சுவாமிகள்,

பித்தா என்று போற்றிப் பெரும்பயன் பெற்றுள்ளார்கள் பல அன்பர்கள் பித்தனை வணங்குபவர்களும் பித்தர்களாவதில் வியப்பில்லை அதுதான் பேரின்பப் பெருவாழ்வாகும். நாமும் பித்தனை வணங்குவதில் பித்துக்கொண்டு, ‘பித்தப்பெருமான் சிவபெருமான்’ என்று போற்றித் துதிசெய்து அவனது கிரிபானந்த வாரியில் மூழ்கிச் சிவானந்தப் பெருவாழ்வு வாழ முயல்வோமாக

காயாமரத்தின் கனியாகிக்
கனியிற்கோட்டை யுள்ளாகித்
தாயாய்ஏரேழ் உலகுக்கும்
தந்தையான தயாபரனே
யாயாமறைநூ லதனைவகுத்த
அரனேஉந்தன்
அடைக்கலங்காண்
பேயாயெங்கள் பெருமானே
பித்தா!வென்னை ஆளாயோ.
—பரமசிவன்தோத்திரம்.

வாழ்க உலகெலாம்.

‘குமரகுருபரன்’ 15-5-70

### தபால் தந்தி மந்திரிக்கு ......

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

வழங்கியதையொட்டி பிரதமருக்கும், அரசாங்கத்திற்கும் நன்றிதெரிவிப்பதுடன் எங்கள் மந்திரியாரை கௌரவித்து, நாமும், கௌரவமாய் வாழ்வோமாக

பின் மந்திரியைப் பார்த்து:

என் நண்பர் செல்லையாவின் தவப்புதல்வ! சுழிபுரத்தின் அருந்தவப் புதல்வ! வட்டுக்கோட்டை, மூளாயின் பெருந்தவப் புதல்வ! இலங்கைத் தமிழ் மக்களின் மலையில் வெளிச்சமே! சிங்கள மக்களின் செல்வமே! ஸ்ரீமாவோ அரசாங்கத்தின் மந்திரியே நீடூழி வாழ்க.

ஜெகமலாம் புகழ்படைத்த சுப்பிரமணியர் - பருளை சண்முகநாதன் இந்த மந்திரிப் பதவியைத் தந்து முடிசூட்டினர். “அவனன்றி ஓர் அணுவுமசையா” உங்கள் அருமைத் தந்தையார் வெள்ளிக்கிழமைதோறும், வாழைகார் பட்டு வேட்டி உடுத்து, சண்முகநாதன் சந்நிதியில் கும்பிட்டு, கண்ணீர் விட்டதை பலமுறை நான் கண்டேன் “தவம் செய்வார், தங்கருமம் செய்வார் மற்றல்லாதார் அவம் செய்வார் ஆசையின் உள்பட்டு” என்றபடி அவரின் தவம மகனை இந்நிலையில் வைத்தது. “தக்கார் தகவிலர் என்பது, அவரவர் எச்சத்தால் காணப்படும்” என்றபடியும் ஆனது. மகனுகிய மந்திரியும் தகப்பனைப்போல பெரிய கடவுள் பக்தி உடையவர். பருளைச் சண்முகநாதர் கோவில் உற்சவ காலங்களில் கிரமமாக விரதம் அநுட்டிக்கும் நியதியுடையவர். “தோன்றிற் புகழோடு தோன்றுக” என்றபடி, மண்ணில் புகழை நாட்ட மந்திரி வந்தார்.

[ஆங்கிலத்தில் பேசிய உரையின் தமிழாக்கம்.]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னப்பு ஆறுமுகம், காரைதீவு கிழக்கு தற்சமயம் மலேசியா அவரின் பிரதிநிதி சின்னப்பு கந்தையா நடராசா காரைதீவு கிழக்கு —வழக்காளி

இல: M. B. 9951 எதிராக

சிதம்பரப்பிள்ளை கந்தையாவும் மனைவி தங்கமுத்துவும் இருவரும் காரைதீவுகிழக்கு —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9951-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1970-ம் ஆண்டு ஆவணி மீ 15-ம் திகதி (15-8-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,885-54ம், 5-5-1968 தொடக்கம் 12-2-69 வரைக்கும் ரூபா 5,000-00க்கும் 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 538-39ம் அறவிடப்படும்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று வலந்தலை இறை "உலிவந்தான்" நெற்பரப்பு (15) பதினைந்து ... கிழக்கு: நடலிங்கம் பெண் சோதிமணியின் ஆதனம் வடக்கு: நடலிங்கம் பெண் சோதிமணிக்கும் அம்பலவாணர் பெண் சிதம்பரத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு: கந்தப்பர் ஞானப்பிரகாசத்தின் ஆதனம் தெற்கு: விசுவநாதர் சங்கரப்பிள்ளைக்கும கந்தையா கணபதிப்பிள்ளைக்குமுரிய உரிமைக்காரரின் ஆதனம், இடங்களும்

பதிவு இலக்கம்: C 249/233

2. ஷை களபூமி இறை "கொய்கைப்புலம்" நிலப்பரப்பு (5) ஐந்தும, பனைகளும், வடலிகளும், இதற்கு எல்லை கிழக்கு: அம்பலவாணர் சபாபதிப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு: ரோட்டு, மேற்கு: கேசன் நாரணனின் ஆதனம். தெற்கு: இதன் மூன்றும ஆதனம், பதிவு இலக்கம்: C 259/160

3. ஷை வலந்தலை இறை 'கொத்தியாவெளி" நிலப்பரப்பு (8) எட்டு. இதற்கெல்லை கிழக்கு: கந்தன் மாரிமுத்தனுக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனம, வடக்கு: மேல்காட்டப்பட்ட இரண்டாம் ஆதனம, மேற்கு: கேசன் நாரணனின் ஆதனம், தெற்கு: தண்ணீர் வாய்க்கால் இதடங்கலிலும் சொரியலாய் ½ பங்கு. பதிவு இலக்கம: C. 259/161

கா. தர்மலிங்கம்
உரும்பிராய் கொமிசனரும், விலைமதிப்பாளரும்
10-6-70 எம். 127 3 7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரையூர், மருத்தீசு முத்தையா தற்போது பழைய பார்க் ரோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். —வழக்காளி

இல. M. B. 10578 எதிராக

யாழ்ப்பாணம், கரையூர் M, K. அந்தோனிப்பிள்ளை பெண் மரியம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10578 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 2-ந் திகதி (2-8-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்திலவிற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 3000/- என்னும் ரூபா 2000/- 31-1-69 தொடக்கம் 15-7-69 வரை 12 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 288-85

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை "நீலதட்டித்தறை அரவன்துறை வன் தறையும் தவசித்தறையும்" 9½ குளமும் கல்வீடும் பயிர் வகைகளும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் இதற்கெல்லை கிழக்கு: டேவிற் ரோட், வடக்கு: மனுவல் ஆசைக்கும் பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனம், மேற்கு: ஆனிஸ் மரியாம்பிள்ளையின் ஆதனம், தெற்கு: குருசு சுவாம்பிள்ளை திரேசிபுத்திருக்குமுரிய ஆதனம இடங்களும் அதற்குரிய வைகளும்.

S. இரத்தினசபாபதி, J. P
விரோசன் ரோட், கொமிசனரும், விலைமதிப்பாளரும்
கோட்டைக்கல், 20-6-70 எம 129 3-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
ஆறுமுகம் தம்பியின்னை, வீமன்காமம்

இல: M B. 8808 எதிராக —வழக்காளி

1. சின்னத்தம்பி சின்னத்துரை
2. பெண் பூமணி, சுதுமலை. எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் M B 8808ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம், 1970ம் ஆண்டு ஆவணி மாதம் 15-ம் திகதி (15-8-70) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக ரூபா 5,810/- இதனுள் ரூபா 3500/-க்கு 3-2-67 — 28-10-67 வரைக்கும் 8% வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 28-10-67 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 473-15 சதமும் இதில் ரூபா 5,000/- போக மிகுதி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப்பற்று, கூடுவில் கோவிற்பற்று கூடுவிலிறை "வேலநிதலை" பா. நில ஸ. 10½ வடமேற்கே இருக்கும் கிணற்றின் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புருத்தும், இதில் மேற்குப் பக்கமாக பா. நில. ஸ. 7 எல்லை கிழக்கு: சரவணமுத்து இளைத்துரை நிலுதனம். வடக்கு: வாய்க்கால், மேற்கு இரத்தினம் பெண் இராசம்மாவினுதனமும், வாய்க்காலும், தெற்கு: வாரிக்குட்டி பின் பெண் பொன்னுவுக்கும் மதுரேசுக்குமுரிய ஆதனம், இடங்களும். பதிவு இல: H. 318/121.

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலகம்" கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
28/1, பருத்தி. யாழ்ப்பாணம். எம். 132 3—7—70
27—6—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B, 10390

1. ஆறுமுகம் சங்கரப்பிள்ளையும்
2. பெண் அன்னம்மா

இருவரும் தம்பசெட்டி பருத்தித்துறை வழக்காளிகள்

எதிராக

1. செகுமாடர் மொகமென்ட் சுல்த்தான் மொகிடீனும்
2. கமீலாஸ் இருவரும் வண்ணார்பண்ணை தெற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10390ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ஆம் ஆண்டு யூலை மாசம் 30-ம் திகதி (30-7-70) வியாழ கிழமை முற்பகல் பத்து மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 4973-33 சதமும் 23-10-68 தொடக்கம் 20-10-69 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12 வீத வட்டியும் பின் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 325-25 சதம்

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேற்கு செம்பகநாச்சி குளம்" ப. கி. 2-ம் குழி 4, 4/5 வீடும் கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு பாபாசகிப் நாச்சி முகமெட்டுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம. வடக்கு மூத்து முகமென்ட் சுல்தான் அப்துல் காதரின் ஆதனம். மேற்கு ரோட்டு தெற்கு பக்கீர் அப்துல் காதர் சாகுல் அமீட்டின் ஆதனம். இது அடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
விதானை வளவு,
சித்தன்கேணி, 15-5-70 / 23-7-70
எம். 131 3-7-70.

## கோட்டு விறபனவு விளம்பரம்

வழகசு இல: M. B. 10417

1. செல்லையா இராமசந்திரமும்
2. பெண் அழகராணி

இருவரும் வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம் —வழக்காளி

எதிராக

T. மூத்துராசா பெண் பாக்கியம் 11, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்

காலஞ்சென்ற தபபு மூத்துராசாவின் ஆதனததுக்கு சட்டப்படி பிரதிநிதி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10417 - ஆம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970 ஆம் ஆண்டு ஆவணி (ஓகஸ்ட்) மாதம் 2-ஆம் திகதி (2-8-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 15126-50 சதம், 6-11-68 தொடக்கம் 15-7-69 வரைக்கும் ரூபா 10000 கசு 12 வீத வட்டியும் அதன்பின் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச செலவு ரூபா 701-36.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழககுப் பகுதி 'மூத்த வெளி' வடககு வாயல் பரப்பு கில லாச்சம் 7 குழி 7 ம் கிணறும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு சின்னத்தமபி சுப்பிரமணியத்துககும் பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு வயித்திலிங்கம் பெண் சிவக்கொழுந்துவுக்குரிய ஆதனம். மேற்கு தம்பு முத்துராசாவின் ஆதனம். தெற்கு ரோட்டு இது அடங்கலும். பதிவு இல. 390/199.

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
ஏலத்தார்.
'விதானை வளவு"
சித்தன்கேணி. 30-5-70,
M. 130 3-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி
T. அத்திராமூர்த்தியும் பெண் தெய்வானையும்

இல: M B 9769 எதிராக —வழக்காளிகள்

யாழ்ப்பாணம், நல்லூர், வேலுப்பிள்ளை செல்வரத்தினமும் பெண் நல்லம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 9769-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970-ஆம் ஆண்டு ஆடி மீ 15-ம் திகதி (15—7—1970) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 9362-40ம், 28-2-68 தொடக்கம் 10-2-69 வரைக்கும் ரூபாய் 7520/-க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 427-10.

ஆதன விபரம்

1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'லுவிசுவளவு" நி பர. 3 குளி 1½ வீடும் கிணறும் பயிர்வகைகளும் மேற்குச் சுவரில் பங்கும், மேற்குச் சுவரில் இருந்து கூரை கட்டும் உரித்தும் எல்லை கிழக்கு சபாபதி கந்தரின் ஆதனம். வடக்கு முருகர் இளையவி செல்லணிதனம். மேற்கு: குறித்த இளையவிக்கும் சங்கரப்பிள்ளைக்குமுரிய ஆதனம். தெற்கு: ரோட்டு பதிவு இல. D. 324/97

(2) ஷை நல்லூர் இறை "விளைதீத்தான் வளவு" கி. பர. 4 எல்லை கிழக்கு: கையொழுங்கை. வடக்கு: ஒழுங்கையும், குணமணி பெண் பாக்கியத்தின் ஆதனமும், மேற்கு: கந்தர் ஆறுமுகத்துக்கும் அப்பாசப்பிள்ளை பொன்னுத்துரைக்குமுரிய ஆதனம், தெற்கு: செல்லர் நடராசாவின் ஆதனம். இத்துடன் தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும். 5 முழ அகலம் கொண்ட பாதையால் வழிவாய்க்கால் உரித்தும்.

பதிவு இல: D. 256/138

நீ. அன்ரனிப்பிள்ளை,
22, கோவில் வீதி கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். எம். 133 3-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில் 1. சின்னத்தம்பி இரத்தினமும் மனைவி
2. இராசநாயகி —வழக்காளிகள்

வழ: M. B. 5153 எதிராக

உடுவில் 1. அப்புக்குட்டி திருநாவுக்கரசு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5153-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு ஆவணி மீ 3ந்உ (3-8-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 3367-50 சதம் 11-10-62 தொடக்கம் 27-5-65 வரைக்கும் ரூபா 3000/- வருடமொன்றுக்கு 3 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 372-81 சதம் அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 236-92 சதம் வெளியாத்துச் செலவு ரூபா 68-82 சதம் இனிமேல்வரும் செலவு ரூபா 67-07 சதம் (20-9-69ல் ரூபா 1,000/- கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோவிற்பற்று உடுவில்இறை 'எல்லை முன்னை' பரப்பு நில. லாச்சம் 20 மேற்கெல்லையில் இருக்கும் கிணறும். 12 அடித் தூரவையும் எல்லை கிழக்கு: பொன்னன் சண்முகத்தின் ஆதனமும், ஒழுங்கையும், வடக்கு: தம்பு சுப்பிரமணியத்தினதும் மனைவி இரத்தினத்தினதும் ஆதனம். மேற்கு: வல்லிபுரம் செல்லையாவினுடையதும், நமசிவாயம் கந்தையாவினுடையதும் ஆதனம் தெற்கு: ஒழுங்கை, இதில் முழுவதிலும் பிரிவிடாப்பங்கு ஐந்தில் ஒன்று.

சி. செ. பாலசிங்கம்
அராலி வடக்கு கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை, 26-7-70 எம். 126 3-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். (1) சின்னத்தம்பி சிவசிதம்பரம் —வழக்காளி

எதிராக

தாவடி வடக்கு தம்பு விஜயரத்தினம் தானாகவும் தனது காலஞ்சென்ற மனைவி மகேஸ்வரியின் கோர்ட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாரன் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 9798ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணியை 1970-ம் ஆண்டு ஆவணி மீ 5-ந்உ (5-8-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 1882-50 இதில் 1500/-க்கு 7-3-1968 தொடக்கம் 29-3-1969 வரை 12 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 533-29 கோட்டுச்செலவுக்கணக்கால் ரூபா 400/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று தாவடி இறை அல்வரேணையும் இலுப்பையடியும் நிலப்பரப்பு 5-ம் கல்வீடும், வான் பயிர்களும், தென்கிழக்கு மூலையில் இருக்கும் கிணற்றில் பங்கும் தூர வழி வாய்க்காலும், எல்லை கிழக்கு செல்லக்குட்டி கந்தையாவுக்குரிய ஆதனம், வடக்கு அம்பலவாணர் பெண் தங்கமுத்துவுக்கும் பொன்னையா பெண் சின்னத்தங்கத்தின் உரித்தாளிகளுக்குரிய ஆதனம். மேற்கு நாகமுத்து பொன்னையாவுக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கையும், கார்த்திகேசு கைம்பெண் அன்னமுத்துவின் உரித்தாளிகளுக்குரிய ஆதனம். இடங்களும்.

க. ஆறுமுகம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்
சித்தன்கேணி, 25-6-70.
M 124 27-6-70

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ, இல. 10107
கரணவாய் வடக்கு (1) கந்தையா மகிலவாகனம் கைம்பெண் மாறுபதிப்பிள்ளை
(2) குணரத்தினம் தர்மராசா
(3) பெண் கமலேஸ்வரி —வழக்காளிகள்
எதிராக
மல்லாகம், வண்ணுன்தறை செல்லத்துரை சபாபதிப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கச்சி —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்விபரிக்கப்படும் ஆதனங்கள் 1970ம் ஞு ஆவணி மீ 20-ம் திகதி (20-8-70) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிதொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கூடுப்பிட்டி கோவிற்பற்று,

1. இமையாணன் குறிச்சியிறை சந்திரன் வீடு வாசல் இதிலும் கூடுப்பிட்டியிறை புதியான்கொட்டனடியும் ஐயன்குல தேவன் வடலியும் கூடிய நி. பர. 11 எல்லை கிழக்கு காலஞ்சென்ற செல்லத்துரை சபாபதிப்பிள்ளைக்குடையவாதனம், வடக்கு றேட்டு, மேற்கு ஆசைப்பிள்ளை பெண் தையல்நாயகிக்கும் மறு பேருக்குமுடையவாதனம், தெற்கு ஜெயதேவன் பெண் தெய்வநாயகிக்குமுடையவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், கல்வீடு, கொட்டில் வீடு கிணறு, வடக்கலிற் சொரியலாய் 15/2 பங்கும் புதியான்கொட்டனடி என்னுங் காணியின் மேற்கரைவாசித்துள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

கூடுப்பிட்டியிறை எருமைப்பிட்டி நி பர 3 எல்லை கிழக்கு வெள்ளவாய்க்கால். வடக்கு: சுப்பிரமணியம் ஆறுமுகத்துக்குடையவாதனம், மேற்கு: மேற்சொல்லிய 1ம ஆதனம், தெற்கு ஜெயதேவன் பெண் தெய்வநாயகிக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் அடங்கலும்.

| | | |
|---|---|---|
| தீரட்டுத்தொகை | ரூபா | 4118—33 |
| ரூபா 2500/—க்கு 3-7-68 தொடக்கம் 7-11-68 வரை 10வீத வட்டி | ரூபா | 83—33 |
| ரூபா 4201—66க்கு 7-11-68 தொடக்கம் 30-5-70 வரை 5வீத வட்டி | ரூபா | 329—39 |
| | | 4531—05 |
| செலவு ரூபா | | 323—74 |
| மொத்தம் ரூபா | | 4854—79 |

சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
எம். 125.
கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
3-7-70

## தீட்சையின்
( 1-ம் பக்கத்து வளர்ச்சி)

டைத்துளே கிருமியாவர்
தண்ணமாரிவரை எண்ணுதிழி
வுரை சாற்றினேர்கள்
திண்ணம் மண்ணவர்
|வெறுக்கத் தீழயலகனேய்
கொள்வர்

பவ்வி - மலம், மூயலகன்- காக்கைவலி போலும் ஒரு நோய் குருவை மனிதனுகவும், மூர்த்தியைக் கல்லாகவும் மதிப்போர் குடும்பத்தில் பெண் கொள்ளலாகாது.

"தேசிகன்றனை மனிதனென்
றுன்னினர் தேவரச்சிலை
என்னேர்"

கந்தபுராணம் மார்க்கண்டேயப் படலம் 66ம் செய்யுள் ஈலாம் வரியிலுள்ளது. நிர்வாண தீர்சை, ஆசாரியாபிடேகம் பெற்ற சூத்திரன் பிராமண சிரேட்டன் ஆவான் என்பது சாத்திரவிதி,

## பொன்னுடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ். நந்தாவில் கற்புலம் அம்மன்கோவிலில் தொடர்ந்து பன்னிரண்டு நாட்களாக கம்பராமாயண விரிவுரை நிகழ்த்தி வந்த சங்கீதகதாப்பிரசங்க வித்துவான் "கானகதாவாரிதி" வண்ணை, பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா அவர்களை முன்னுள் வித்தியாதிபதி திரு எஸ். யூ சோமசேகரம் அவர்கள் பொன்னுடைபோர்த்திக் கௌரவித்தார்

இராம பட்டாபிஷேகத்துடன் விரிவுரை பூர்த்தியான தினத்தன்று திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். இவர் அண்மையில் மலேஷியா சிங்கப்பூர் சென்று புகழோடு திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. [ந. நி.]

## கண்ட பாவனையில்



பக்தர்: "சிலாது மரணஊர்வல வைபவங்களில் பட்டாசு வெடி கொழுத்தும் ஒரு வழக்கமிருந்து வருகிறதே! அதுதேவைதானு"?

சித்தர்: "கண்டபாவனையில் கொண்டை முடிவது"என்பார்களே எங்கோ, யாரோ அறியாமையாற் கைக்கொண்ட வழக்கம் இன்று நம்மிடை புகுந்துவிட்டது! அறிவுள்ளவர்கள் — சமகத் தொண்டர்கள் இவைகளை அகற்ற முன்வரக்கூடாதா......?

—"நாயன்மார் - நாதன்"

## மணிவாசகர் குருபூசை

### குருநாகல் சைவமகாசபை

குருநாகல் சைவமகாசபையின் ஆதரவில் சபை மண்டபத்தில் மணிவாசகப்பெருமான்குருபூசை 7-7-70 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணி தொடக்கம் சபைத் தலைவர் டாக்டர் ஆ. சுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நிகழவிருக்கிறது ந நி.

x x x

### பரமேசுவரக்கல்லூரியில்

7-7-70 செவ்வாய்க்கிழமை காலை யாழ். பரமேசுவரக் கல்லூரியில் மணிவாசகப் பெருமான் குருபூசை வழமைபோலச் சிறப்பாக நிகழவிருக்கிறது.

x x x

### நல்லூர் ஆசிரியகலாசாலையில்

நல்லூர் அரசினர் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் மணிவாசகப் பெருமான் குருபூசைத் தினம் இந்துமாணவர் மன்றத்தினரால் 7-7-70 இல் அன்று சிறப்பாகக் கொண்டாடப்பெற விருக்கிறது.

## முருகவேள் விழா

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 18-7-70 சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 6½ மணி வரை கூட்டுப் பிரார்த்தனையும் 6½ க்கு மேல் ஆடி முருகவேள்விழாவும் நடைபெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 10110
பண்ணுகம் தெற்கு,
கைலாசபிள்ளை கைம்பெண் அன்னலெட்சுமி
—வழக்காளி
எதிராக
மூளாய்,
1. சுப்பன் கணபதி (காலஞ்சென்ற 2-வது எதிரி சுப்பன் முருகேசுவின் ஆதனத்துக்கு தானுகவும் சட்டப்பிரதிநிதி)
2 சின்னவன் அப்புத்துரை (காலஞ்சென்ற 3-வது எதிரி சின்னவன் சபாபதியின் ஆதனத்துக்கு தானுகவும் சட்டப்படியும் பிரதிநிதி)
3 சின்னவன் அப்புத்துரை பெண் நாகம்மா எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின்M B 10110ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1970-ம் ஞு ஆடி மீ 31-ஆம் திகதி (31-7-70) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூ 1875/—க்கு 26-6-68 தொடக்கம 5-4-69 வரைக்கும் ரூபா 1500/—க்கு 10 வீத வட்டியும, அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றுக இறுப்படும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 465—60 சதமும்.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்குப் பகுதி, சங்கானை கோவிற்பற்று, மூளாய் இறை "மூமரன்புலம்" நிலப்பரப்பு 4 குளி 2½ இதில் கிழக்குப் பக்கத்தால் நி. ப. 3 சின்னட்டியன் நன்னியனின் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும். தூர்வையினும் பொதுவாகவுள்ள 2½ குளி காணிப்பாகம் வடப்பட்ட வழிவாய்க்காலில் உரிமையும். எல்லை கிழக்கு வெள்ளையன் கிருஷ்ணனின் ஆதனம், வடக்கு: ஒழுங்கையும், வேலன் சுப்பனின் ஆதனமும். மேற்கு: சின்னட்டியன் நன்னியனின் காணியில் மீதிப் பங்கு. தெற்கு: தூர்வைக்கும் வழிவாய்க்காலுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பொதுக்காணி. இடங்கலும். E. 392/100-ல் மதிப்பட்டது.

2. ஷை மூளாய் இறை, "குமரன் புலமும நமரகிரியும்" நிலப்பரப்பு 4 குளி 7. இதில் தெற்குப் பக்கத்தால் நி. ப 2 தவிர மீதியாகவுள்ள நி. ப. 2 குளி 7ம், கிணற்றில் அரைப் பங்கும். செய்பயிர் வான்பயிரும் எல்லை கிழக்கு: இலகுப்பிள்ளை கைம்பெண் கதிரமலையின் காணி வடக்கு: ஒழுங்கை, மேற்கு: கையொழுங்கை, தெற்கு: சின்னவனும் பெண் முத்திக்குமுரிய காணியின் மீதிப்பங்கு இடங்கலும் அதுதுடன் மேற்கிலுள்ள கையொழுங்கை பாவிப்புரிமையும். E 392/101-ல் மதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர் உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 25-6-70
எம 128 3—7—70

## ஈழத்துச்சிதம்பரம் எனவழங்கும் காரைநகர்
( 2- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

தாம் அணிந்திருந்த பொற்கடுக்கன்களைக் கழற்றி 'இவன் பொருட்டோ இஃதிவ்வாறுயிற்று' என்று ஆனந்தக் கணணீர் சொரிய குரையில் இட்டு மறுமுறை வார்க்கும்படி ஆசாரிமாரிடம் கூறினர். ஆசாரிமாரும் அவ்வாறே வார்த்தனர். அப்போது சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுரு செவ்விதாக அமைந்தமையை ஆசாரியார் மூலம் அறிந்தார். உடனே அடியவருடைய ஆவியும் நீங்கியது. அப்போது ஆகாயத்தில் தேவதுந்துபி ஆர்த்ததாக ஐதிகம். ஆசாரிமாரும் அங்கு நின்றவர்களும் அங்கு நிகழ்ந்தமை கண்டு ஆச்சரியமடைந்தனர்.

சண்முகத்தார் அங்கு நிகழ்ந்த செய்தியைக் கண்டு அதிசயமடைந்தனராயினும் தன் தந்தையின் பிரிவாற்றாது மிக வருந்தினர். தந்தைக்குச் செய்ய வேண்டிய அந்திய கருமங்களை விதிப்படி செய்தார். அன்று அரசினர் பெருநாளாதலின் அலங்கரிக்கப்பட்ட சிதம்பரநகர் வீதி வழியாக அவ்வடியவரின் உடலம் மயானத்தை அடைந்தது. அங்கு செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் சண்முகத்தார் செய்து முடித்தார்

சில நாட் கழித்து சோமஸ்கந்தமூர்த்தி சண்முகத்தாரால் காரைநகருக்குத் தோணி மார்க்கமாகக் கொண்டு வரப்பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 மாணிக்கம் கனகரத்தினமும் மனைவி
2 புவனேஸ்வரியும் இருவரும் ஆனைகோட்டை
இல: M B 7258 எதிராக —வழக்காளி
1 இளையதம்பி மதியாபரணமும் மனைவி
2 பாக்கியமும் இருவரு , கொககுவில் மேற்கு
யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7258 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஞு ஆவணி மீ 12-ஆம் உ (12-8-70) புதன்கிழமை முற்பகல்10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபா 6400/00-ம் 19-2-65ல் இருந்து 1-2-66 வரைக்கும் ரூபா 4000/00க்கும் 12 வீத வட்டியும் அதன் பின் முழுததொகைக்கும் இறுக்கு வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 454/80-ம் இதில் கோட்டுச் செலவால் கொடுத்த ரூபா 300/00-ம், 12-1-67-ல் கொடுதத ரூபா 2000-00ம் 29-2-68ல் கொடுத்த ரூபா 1000-00ம், 4-6-69ல் கொடுத்த ரூபா 1000-00ம் கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கு இறை "குருவெட்டதான அல்லது குருவிழுந்தான்" நிலப்பரப்பு 6, 3/8ம் வீடுசளும் செய்பயிர், வான்பயிர்களும் . கிணறும், இதற்கெல்லை கிழக்கு: நடராசா பெண் இராசமணியின் ஆதனம் வடக்கு: தர்மலிங்க பெண் செல்லமுத்துவிற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்; மேற்கு: இந்த ஆதனத்திற்கு போககுவரத்து செய்வதற்குவிடப்பட்ட பாதை முகப்பும் வீரசிங்கம் பெண் இராசமணியின் ஆதனமும், தெற்கு: பொன்னம்பலம் பெண் அன்னம்மாவிற்தும் சின்னையா சுப்பையாவிற்குமுரிய ஆதனங்கள், இடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும். பதிவு இல: ப. 243/30

கா. தர்மலிங்கம்
உரும்பராய், 15-2-70, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 135 3-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அப்பாக்குட்டி அருளம்பலம் கோப்பாய் தெற்கு
வழ: இல M. B. 11058 எதிராக —வழக்காளி
T. S. துரைராசா 10/2, ஐயனுர்கோவில் றேட்டு,
வண்ணுர்பண்ணை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11058ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஞு ஆவணிமாதம் 19-ம திகதி (19-8-70) புதன்கிழமை முற்பகல 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 11,671-65ம 22-8-69ல் இருந்து 20-11-69 வரைக்கும் ரூபா 9 400-00க்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 495-97 அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை தென்மேற்கிறை "நாவலடி" நிலப்பரப்பு (4) நாலும் வீடும், கிணறும் மனைகளும், செய்பயிர் வான்பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு: Dr. S. துரைஅப்பாவின் ஆதனம். வடக்கு: றேட்டு, மேற்கு: T. S துரைராசாவின் (எதிரியின்) ஆதனம் மேற்கு: துரையப்பா அம்மணியின் ஆதனம், இடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

கா. தர்மலிங்கம்
உரும்பிராய். கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
2-7-70 எம். 134 3-7-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாசயந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 26—6—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்